பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ கார்த்திகை மீ 06 உ வியாழக்கிழமை (22 11 1990) ஹிஜ்ரி 1410 ந. ஆகிர் 12 கதிர் 260

# தச்சன்காட்டில் உக்கிர மோதல்!

## ஐந்து போராளிகள் வீரமரணம் சிப்பாய்கள் பலர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 22

வயாவிளான் மற்றும் தச்சன்காட்டுச் சந்தி ஆகிய பகுதிகளில் நேற்றும் உக்கிர மோதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை ஐந்து மணியளவில் ஆரம்பமான இந்த மோதல்களில் படையினர் பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இருமுனைகளில் வெளியேற முற்பட்ட ராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

அதைத் தொடர்ந்து இப்பகுதிகளில் நேற்று பெரும் குண்டுச் சத்தங்களும், ஷெல், பீரங்கிச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன. இதனால் இப் பகுதிகள் அதிர்ந்தன.

புலிகளின் கடும் தாக்குதல்களை அடுத்து வயாவிளான் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

தச்சன்காட்டுச் சந்தி வழியாக வந்த இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் கடுமையாக மோதிக்கொண்டனர்.

அங்கு இராணுவ டிரக் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டது. டிரக் பலத்த சேதமடைந்தது.

டிரக்கில் வந்த இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்பட்டது.

நேரடி மோதல்களின் போதும் இராணுவத்தினருக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் விவரம் ஏதும் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருநெல்வேலியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு

திருநெல்வேலி, நவ. 22

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகாமையில் நேற்றுக் காலை 8-45 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தின.

அதனால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

மக்கள் பதுங்கு குழிகளுக்குள் சென்று, பாதுகாப்புத் தேடிக் கொண்டதால், உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

இப்பகுதியில் இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் குண்டு வீச்சுச் சம்பவங்கள் நடந்தன.

(ஓ-143-5-3)

## நாயன்மார்கட்டிலும் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 22

நாயன்மார்கட்டு செம்மணி குறுக்கு வீதியிலும் நேற்றுக் காலை 8 50 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

வீதியின் நடுவில் குண்டு விழுந்து வெடித்தது. அப்போது வீட்டு வளவில் நின்ற குமாரசாமி கைலாசபதி [59 வயது] என்பவர் காலில் காயமடைந்தார்.

குண்டு வீச்சினால் இப்பகுதியில் தென்னை மரங்கள் சில முறிந்து காணப்பட்டன. வீடுகளும் சிறு சேதங்களுக்கு இலக்காகின.

[ஓ-5]

## ராணுவ முகாம்கள் அருகில் மாவீரர் தின அலங்காரம்

யாழ்ப்பாணம், நவ. 22

வவுனியாவில் இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள பல இடங்களிலும் மாவீரர் வாரத்தை ஒட்டி அலங்காரம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா-மன்னார் வீதியில் பட்டாணிச்சூரிலும், யாழ். வீதியில் தாண்டிக்குளத்திலும் இவ்வாறு அலங்காரம் செய்யப்பட்டிருந்த இடங்களை நோக்கி நேற்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இறுதி வெற்றி காண அனைவரும் ஒரே குடையின் கீழ் திரள்வோம்!

## மாத்தயா மாவீரர் வாரச் செய்தி

யாழ்ப்பாணம், நவ. 22

மாவீரர்கள் எந்த இலட்சிய தாகத்தை நெஞ்சில் இருத்திக் களம் புகுந்து வீரமரணம் அடைந்தார்களோ, அந்த இலட்சியத்தை, உறுதியுடனும் நம்பிக்கையுடனும் செயற்படுத்தி இறுதி வெற்றி காண, நாம் அனைவரும் ஒரே குடையின் கீழ் அணி திரள்வதுதான் எமது மாவீரர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித்தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) மாவீரர் வாரத்தையொட்டி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்கள் தாய் மண்ணுக்காக மடிந்த மாவீரர்களை இன்று நாங்கள் நினைவு கூருகிறோம். எமது வரலாற்றில் இந்த மாவீரர் நாள் ஒரு பிரதானமான நாள், மகத்தான நாள்.

நெஞ்சில் விடுதலை நெருப்பையும், உணர்வில் சுதந்திர தாகத்தையும் சுமந்து; எமது மக்களுக்காக மடிந்த இம்மண்ணின் மைந்தர்களை தமிழீழம் கௌரவிக்கின்ற நாள்.

உயிர்களில் உன்னதமான அந்த உயிர்களை, மனிதர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் எழுச்சி பொங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 22

மாவீரர்நாள் நிகழ்ச்சிகள் நேற்று குடாநாடு எங்கும் உணர்ச்சி பூர்வமாக - எழுச்சி பொங்க ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 9 மணியளவில் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், விடுதலைப் புலிகள் அலுவலகங்கள், பாசறைகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் தமிழீழத் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன.

பூரண கும்பம் வைத்து, தமிழீழ தேசிய கீதம் இசைக்கப்பட்டு, உணர்வு பூர்வமாகக் கொடியேற்று வைபவங்கள் இடம்பெற்றன.

இந்த வைபவங்களில் கலந்துகொண்டவர்களில் அனேக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் விழுந்து நவக்கிரியில் ஒருவர் பலி!

### அகதியாக வந்த பலர் காயம்

அச்சுவேலி, நவ. 22

பலாலி முகாமில் இருந்து நேற்றுக்காலை திடீரென, பத்தமேனி, புத்தூர், நவக்கிரி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நவக்கிரியில் விழுந்த ஷெல்களினால் ஒருவர் பலியானார். சிலர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவரும், காயமடைந்தவர்களும் வயாவிளான், குரும்பசிட்டி, இடைக்காடு ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாகச் சென்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

குட்டியப்புலத்தைச் சேர்ந்த செல்லன் தவராசா (29 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

தவம் செல்வராணி [38 வயது], சுந்தரமூர்த்தி ஸ்ரீபன் (9 வயது), சின்னையா மகாலிங்கம் [35 வயது], இட்டிணன் இராசரத்தினம் (28 வயது), சக்திவேல் குலராணி [20 வயது] நவக்கிரியைச் சேர்ந்த கிருபானந்தன் [18 வயது] பத்தமேனியைச் சேர்ந்த கதிரமலைநாதன் (37 வயது) ஆகியோர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[ஓ-11-3-15-5]

## ஷீ-பிளேன் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 22

நேற்றிரவு அரியாலை, கோண்டாவில் பகுதிகளில் ஷீ-பிளேன் வேட்டுக்களைத் தீர்த்தது.

(ஓ-3)

## பல்கலைக் கழகத்திலும் கொடியேற்று நிகழ்ச்சி

மாவீரர் தினத்தை ஒட்டி நேற்று யாழ். பல்கலைக் கழகத்திலும் சம்பிரதாய பூர்வமாக தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

மாணவ பிரதிநிதி செல்வன் சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். விஞ்ஞான பீடத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் உரை நிகழ்த்தினார். (உ)

## தெல்லிப்பழையிலும் நேற்று பெண்மணி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

நேற்று மாலை மாவிட்டபுரம் இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தெல்லிப்பழையில் விழுந்து வெடித்தன. காயமடைந்த பெண் ஒருவர் பின்னர் மரணமானார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நாகேஸ்வரி [32 வயது] என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் வைக்கப்பட்டிருந்தது.

# குடாநாடு எங்கும் நேற்றும் ஹெலி தாக்குதல்; பலர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 22

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முழுநாளும் ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின.

தாக்குதல்களில் காயமடைந்த பலர் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அவ்வப்பகுதி செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலையே தெல் [illegible] ளைவெட்டிப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் ஆரம்பமாகி விட்டன.

அதன் பின்னர் தெல்லிப்பழை, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, அரியாலைப் பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்தன.

அச்சுவேலி, புத்தூர், வளலாய், தொண்டமானாறு பகுதிகளிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

தனபாலசிங்கம் புவனசிங்கம் [20 வயது] கொல்லன் கலட்டி, சிறுஷபராசா சிவபாக்கியம் [35 வயது] தெல்லிப்பழை, கதிரேசு வேலுப்பிள்ளை [72 வயது] வீமன் காமம்.

பலர் சிறு காயங்களுக்கு இலக்காகினர். [ஓ-15-3-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்ஸ்" இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 89/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இணை பிரதான வீதி, மானிப்பாய். (C/5898)

### மூக்குப் பொடி

மிகத்தரமான காரம், மணம், குணம் நிறைந்த மூக்குபொடி சாதாரண வாசனையூட்டிய வகைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- V.K தேவகுருநாதன் 142, ஆடியபாத றோட், (கல்வியங்காடு சந்தையில் இருந்து 75 யார் தூரத்தில் உள்ளது.) யாழ்ப்பாணம். (14792)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (இ/5402)

### "இலவசமாக நாவல்கள்"

மீரா வெளியீடுகள் 1989ல், 1990ல் வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/ ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந், புத்தகசாலை, நல்லூர். (14806)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் பாடசாலை மாணவர்களிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்வோர் வரையிலானவர்களுக்கு ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு (நேரில் அல்லது கடித மூலம்) S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14809)

## பாகிஸ்தான் வெற்றி

கராச்சியில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கு இந்தியத் தீவு அணியை 8 விக்கட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் தோற்கடித்தது.

முதலாவது இன்னிங்ஸில், பாகிஸ்தான் அணி 345 ஓட்டங்களையும் மேற்கிந்திய அணி 261 ஓட்டங்களையும் எடுத்திருந்தன.

இரண்டாவது இன்னிங்ஸில், மேற்கிந்திய அணி 181 ஓட்டங்களையும், பாகிஸ்தான் 2 விக்கட்டுகள் இழப்புக்கு 98 ஓட்டங்களையும் எடுத்தன. (உ-எ)

# முதல் வாக்கெடுப்பில் போதிய வாக்குபெற தாட்சர் தவறினார்

## தலைமைப் பதவி ஊசலாட்டம்

லண்டன், நவ. 22

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைப் பதவிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதற் கட்ட வாக்களிப்பில் பிரிட்டிஷ் பிரதமர் மாரிகரட் தாட்சர் வெற்றிபெறத்தவறிவிட்டார்.

அவருக்கு 204 எம் பிக்களே வாக்களித்தனர்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஹெஸல்ட்லைனுக்கு 152 எம். பிக்கள் வாக்களித்தனர்.

16 எம். பிக்கள் வாக்களிக்கவில்லை.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் உள்ள கன்சர்வேட்டிவ் எம். பிக்களின் மொத்த எண்ணிக்கை 372 இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு எம். பிக்களின் ஆதரவை திருமதி தாட்சர் பெறத் தவறிவிட்டார்.

அதனால் இரண்டாம் கட்ட வாக்களிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி இன்று வியாழக்கிழமை ஆகும்.

இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடப்போவதாக பிரதமர் தாட்சர் பாரிஸில் இருந்து அறிவித்துள்ளார்.

தானும் மீண்டும் போட்டியிடப்போவதாக திரு. மைக்கல் ஹெஸல்ட்லைனும் அறிவித்திருக்கிறார்.

இதேவேளை— பிரதமர் தாட்சரின் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக தொழில் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. நீல் கின்னொக் அறிவித்தல் கொடுத்திருக்கிறார். (இ-எ)

## தேவிலால் ஆதரவாளர் கூச்சல்

புதுடில்லி, நவ. 22

நேற்றுக்காலை புதிய மத்திய அமைச்சர்கள் பதவி ஏற்ற வைபவத்தின் போது ஜனாதிபதி மாளிகையின் அசோக மண்டபத்தில் ஒரே கூச்சலும் குழப்பமும் நிலவின.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் பின்னால் இருந்து துணைப்பிரதமர் தேவிலாலுக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

அமைச்சர்கள் நியமனத்தின் போது துணைப்பிரதமர் தேவிலால் சிபார்சு செய்தவர்கள் புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்தே, அவரது ஆதரவாளர்கள் கூச்சலும் குழப்பத்தையும் ஏற்படுத்தினர் என்று பி. பி. சி அறிவித்தது. (இ - எ)

## இந்திய அமைச்சரவை விவரம்

புதுடில்லி, நவ 22

விரிவுபடுத்தப்பட்ட இந்திய அமைச்சரவையில் பிரதமர் சந்திரசேகரிடம் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்கள் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

துணைப்பிரதமர் தேவிலால் விவசாயம் மற்றும்உல்லாசப்பயணத்துறை அமைச்சராகவும் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஏனைய கபினட் அந்தஸ்து பெற்று உள்ள அமைச்சர்களின் விவரம் வருமாறு;

1. வெளியுறவு அமைச்சர் — வித்யாசரண் சுக்லா
2. வாணிபம், சட்டம், நீதித்துறை அமைச்சர் — டாக்டர் சுப்பிரமணிசுவாமி
3. நிதி அமைச்சர் — யஸ்வந்த்சின்ஹா
4. ரயில்வே அமைச்சர்— ஜனேஸ்வர் மிஸ்ரா
5. மனித வளம் மேம்பாட்டுத்துறை அமைச்சர் — ராஜ் மங்கள் பாண்டே
6. ஜவுளித்துறை அமைச்சர் — ஹூக்கும் நாராயண் தேவ்
7. ரசாயன அமைச்சர் — ஏ, கே. சென்
8. எரிபொருள்கள் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் — சத்தியபிரகாஷ் மாளவியா.
9. நீர்வளத்துறை அமைச்சர் — மனுபாய் கொத்தாரியா
10. உணவு, விநியோக அமைச்சர் — ராவ் பிரேந்திர சிங்
11. நகரப்புற அபிவிருத்தி அமைச்சர் — தௌலத்ராம் சரண்
12. சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் — சகிலோ ரெஹ்மான்
13. எரிசக்தி அமைச்சர் — கல்யாண் ஹவ்வி

(8-ஆம் பக்கம் பார்க்க)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. வே. இ. தம்பிப்பிள்ளை அவர்கள்

மலர்வு:- 22 - 11 - 1928

மறைவு:- 22 - 11 - 1978

தந்தையே! தலைவா! காரைநகர் பாலாவோடைக்கு வந்தாய் கிளிநொச்சி வர்த்தகராய் வளர்ந்தாய் எங்கள் வாழ்வுக்கு வளமானாய். வந்தது போல் போவது மானாய்நினதுபோதங்கள் எங்களுக்குவேதங்களாயின. வேதனைகளிலெல்லாம் உன் வேதங்களே எங்களைத் தாங்கிக்கொண்டன! தங்கள் ஆன்மா சிவப்பேறெய்தி மகிழப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகன்மார், மகள்மார், மருமகன், மருமகள், பேரப்பிள்ளை, உற்றார். உறவினர், நண்பர்கள், கடைச் சிப்பந்திகள்.

(14811)

## Faculty of Agriculture

University of Jaffna Kilinochchi.

Reference advertisement appeared on 1990 - 11 - 21 for the above Faculty.

Applications are called for the

POST OF TEMPORARY DEMONSTRATOR IN AGRICULTURAL ECONOMICS and NOT For the Post of Temp: Demonstrator in Agricultural chemistry.

Regret very much for the error.

REGISTRAR.

University of Jaffna, Thirunelvely. Jaffna. 1990 - 11 - 21

(C/...)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:- 06 - 07 - 1939

இறைவனடியில்:- 22 - 11 - 1989

திதி:- 11 — 12 — 1990

### அமரர் திரு. வி. ச. இராசையா

[தெல்லிப்பழை அஞ்சலக அதிபர்]

ஆண்டொன்று போனாலும் ஆறுமோ அயரம்
ஈன்றெடுத்த மக்களும் அன்பெடுத்த மனைவியும்
கதறுகின்றார்! குமுறுகின்றார்! அன்புருவே
இராசையா
நீ பேசையா! என்றும் எமக்கு நீ நேசையா!

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

"பராசக்தி வாசா"
கைதடி கிழக்கு.
கைதடி.

(14787)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகரட்ணம் நல்லையா

நாரந்தனையைச் சேர்ந்த திருமதி யோகரட்ணம் நல்லையா அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. நல்லையா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி சரோஜினி திரு. டன்ஸ்ரன் (லண்டன்), பஸ்ரியன் (இந்தியா), றெமிஜியா (அவுஸ்திரேலிய உரிமையாளர் நியூவிக்ரேஸ் யாழ்ப்பாணம்), அன்ரன் (லண்டன்), ஞானம் (லண்டன்), சாள்ஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயரும், திருமதி தங்கரட்ணம் பெனடிக்ற்றின் சகோதரியும் திரு. தேவதாஸ் (நவீல்ட் பாடசாலை கைதடி), திருமதி எட்மண்டா, திருமதி கமலா, திரு. தேவசகாயம் (உரிமையாளர் நியூவிக்ரேஸ், அவுஸ்திரேலியா), திருமதி ஜெயதேவி (லண்டன்) திருமதி ராணி (லண்டன்). திருமதி யோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், விஜி, ராஜன், (அவுஸ்திரேலியா), றாயூ, றஜு, நிராஜ் (லண்டன்), நிசான், சுஜித், துவுான் நிஜேஸ், நிலாணி, சுராஜ் (அவுஸ்திரேலியா), சுஜேன் (அவுஸ்திரேலியா), சுகு (அவுஸ்திரேலியா), எக்றிக்சன் (லண்டன்), அன்றூ (லண்டன்), பிறிஸ்சில்வா (லண்டன்) ஆகியோரின் பேத்தியுமாவர், அன்னாரின்பூதவுடல் 22 - - 11 - 90 வியாழக்கிழமை மாலை 3. 00 மணிக்கு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாத சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
வே. பீ. தேவதாஸ்
(மருமகன்)
466/2B புனிதயுவானியார் கோவில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[14825]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட பல வசதிகள் நிறுத்தம்

## திருப்பி அனுப்புவதற்கு முன்னேற்பாடா?

பொன், நவ. 22

மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் கோரிச் சென்று, அங்கு அகதி முகாம்களில் தங்கியிருந்த ஈழத் தமிழர்கள் இப்போது பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள்.

அவர்களுக்குவழங்கப்பட்ட பல வசதிகளும், சலுகைகளும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்ததைத் தொடர்ந்து ஈழத் தமிழருக்குப்பெரும்சிரமங்கள் தோன்றியுள்ளன. வாழ்க்கை நடத்துவதே பெரும் சோதனையாக மாறி உள்ளது.

ஈழத் தமிழர்கள் தங்கியிருந்த பல அகதி முகாம்கள் மூடப்பட்டுள்ளன; அதே வேளை, வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் உடுபுடவைகள்வாங்கும்சலுகை கார் வாங்குவதற்கு உள்ள சலுகை என்பனவும் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

அரசியல் தஞ்சம் கோரி, அகதிகளாக வாழ்பவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு ஜேர்மனி மக்கள், இப்போது மேற்கு ஜேர்மனிக்குள் மிகக் கூடுதலாக வந்து வேலை வாய்ப்புக்களை பெறுவதனாலும், இடநெருக்கடிகள் ஏற்படுவதாலும் ஈழத் தமிழர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பிரச்சினை தீர்ந்ததும் ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு முன்னோடியாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் மட்டத்தில் இருந்து தெரியவருகிறது. (அ-3)

# உதயன்

## எப்படியும் ஒரு முடிவே!

கம்பஹா மாவட்ட எம்பியான திரு. அனுரா பண்டாரநாயக்கா தாம் தமிழ் விரோதிகளான அரசியல் தலைவர்களின் புத்திரன் என்று எடுத்துக்காட்டி இருக்கிறார்.

வடக்கையும்-கிழக்கையும் உடனே தனித்தனியாகப் பிரித்து விடவேண்டும் என்று அவர் நாடாளுமன்றத்தில் கர்ச்சித்திருப்பது அதனையே ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறது!

வடக்கு—கிழக்கும் சேர்ந்ததே தமிழர் தாயகம் என்ற தமிழர்களின் அரசியல் கோட்பாட்டை. அந்தத் தாயகத்தைக் காப்பாற்றிப் பேண வேண்டும் என்ற அபிலாஷையை, அடியோடு வேரறுக்க விளையும் இலட்சியம் அனுராவின் பேச்சில் தொனிக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் இன்று ஏற்பட்டுள்ள நிலைக்கு வடக்கு - கிழக்கு இணைப்புத்தான் காரணம் என்று மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார் அவர். தமிழர்களின் பிறப்புரிமைகளை வழங்குவதற்குச் சிங்களப் பேரினவாதம் தடையாக இருப்பதால் தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை முற்றாக மறந்து, இணைப்பைக் கண்டு கிலி கொள்கிறார்.

அவர் மட்டுமென்ன, தென்னிலங்கை அரசியல்வாதிகளில் 99 சத வீதத்தினரும் அந்த ரகத்தினரே. ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொள்வோமே வடக்கு-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவது என்ற விவகாரத்தில் அது கண்ணாமூச்சி விளையாடுகிறது! பார்க்கவில்லையா?

இணைப்புக் குறித்து தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு கருத்து உடன்பாட்டுக்கு வாருங்கள். அதன் பின்னர் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை, ஆளுங் கட்சியின் நிலைப்பாட்டைத் தீர்மானிப்போம் என்று தட்டிக் கழித்து வெகு தந்திரமாகக் காலத்தைக் கழிக்கிறார் ஜனாதிபதி பிரேமதாசா.

இத்தனை அழிவுகள், கொலைகளின் பின்னரும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரும்புவதாகக் கூறிக் கொண்டே, இணைப்பை அரசு எதிர்க்கிறது. அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாமல், காணி அமைச்சர் தயாரத்தினா போன்றவர்கள் மூலம் வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது!

மொத்தத்தில் தமிழர்களின் உரிமைகளை சிங்கள அரசியல் வாதிகள் அங்கீகரிக்கப்போவதில்லை என்பதையே இது காட்டுகிறது.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண்போம் என்று கூறுவதெல்லாம், தாம் விரும்பியதையே தமிழர்களுக்குக் கொடுக்க முடியும் என்ற கருப்பொருளை உடையதே என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் மறைமுகமாகக் கூறி வருகிறார்கள்.

எனவே, தமிழர்களின் நியாயபூர்வமான பிறப்புரிமைகள் கிடைக்கவேண்டுமானால் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற முடிவே மிச்சம்.

## தாதிகள் பரீட்சை முடிவு

கொக்குவில், நவ. 22

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுபவர்களின் முதலாம் வருட பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைக்குத் தோற்றிய 159 மாணவர்களில் 102 பேர் சித்தி அடைந்துள்ளனர். (இ - 69)

## படகுச் சேவை பகல் நேரம்

அல்லைப்பிட்டி — நாவாந்துறை படகுச்சேவை கடந்த இரு வாரங்களுக்கு மேலாக பகல் நேரங்களில் நடைபெற்று வருகின்றது. [இ - 88]

## ஜே. வி. பி. முகாம் முற்றுகை

கொழும்பு, நவ. 22

தென் பகுதியில் ஜே. வி பி யின் முகாம் ஒன்றை தங்காலைப் பொலீஸார் முற்றுகையிட்டனர்.

அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை ஏற்பட்டதாகவும்-இறுதியில் தீவிர வாதிகள் தப்பி ஓடிவிட்டனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## வேலணை உ. அ. அ. பிரிவில் விசேஷ உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 22

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கு விசேஷ உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கம் இந்த விநியோகத்தை ப. நோ. கூ. சங்கம் மூலம் மேற்கொண்டார்.

இந்த திட்டத்தின் கீழ் ஒருவருக்கு 1½ கிலோ மாவும், 100 கிராம் பருப்பும், குழந்தைகளுக்கு ½ கிலோ பால் மாவும் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-8)

## சாயி ஜெயந்தி

ஸ்ரீ. சத்திய சாயிபாபாவின் 65ஆவது பிறந்தினக்கொண்டாட்டங்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணி தொடக்கம் மாலை வரை திருநெல்வேலி தெற்கு சமித்தி மண்டபத்தில் நடைபெற இருக்கின்றன. (இ 3)

## மீன்பிடிப் படகு மீது தாக்குதல்

ஆழியவளையில் தொழிலுக்கு புறப்பட்ட படகுகள் மீது சிபிளேனிலிருந்து தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது. (இ-111)

## வேலையற்றோர் பட்டியல் நீளுகிறது

கொழும்பு, நவ. 22

நாட்டில் வேலையற்றோர் பட்டியல் நீளுகிறது.

ஆண்டு தோறும் வேலை இல்லாதோர் பட்டியலில் சுமார் ஒரு லட்சத்து 24 ஆயிரம் பேர் புதிதாக சேர்ந்து கொள்கின்றனர்.

ஆனால் ஆண்டு தோறும் சுமார் 90 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்புக்களைப் பெறக்கூடியதாக இருக்கிறது என்று ஓர் ஆய்வு கூறுகிறது. (ஓ-எ)

## கண்நோய்

ஒட்டுசுட்டான், நவ. 22

ஒட்டுசுட்டான் பகுதியில் கண்நோய் பரவி வருகிறது. (இ-113)

## இலங்கைப் பெண்கள் திரும்ப எஜமானர்கள் தடையாம்:

கொழும்பு, நவ. 22

குவைத்தில் இலங்கைப் பணிப்பெண்கள் பலர் இன்னும் எஜமானர்களால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண்கள் குவைத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படுகிறார்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

## ரேகடி இறங்கு துறை

யாழ். ரேகடி இறங்கு துறையை வடமாகாணகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொறுபேற்கமுடிவு செய்துள்ளது. [இ-51]

## காரைநகரில் சாயி விழா

காரைநகர், நவ 22

காரைநகரில் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 65 ஆவது வருட அவதார தின விழா நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது.

காரைநகர் சாயி சமித்தியினர் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (ஓ)

## ஆரையம்பதி பகுதியில் 7 சிப்பாய்கள் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், நவ. 22

கடந்த திங்கள் ஆரையம்பதிப் பகுதியில் இராணுவத்தினர் மீது இரு தடவைகள் தாங்கள் மேற்கொண்ட கிளைமர் தாக்குதலில் 7 சிப்பாய்கள் காயமுற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

காலை 10 மணியளவில் ஆரையம்பதி முகாமிலிருந்து மண்முனைத் துறைக்கு ரோந்து சென்ற படையினர் மீது தாக்குதல் நடத்தியதில் 4 சிப்பாய்கள் காயமுற்றனர் என்றும்—

அவர்களை மீட்க மீண்டும் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது ஒல்லிக்குளத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தியதில் 3 சிப்பாய்கள் காயமுற்றனர் என்றும் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் பின்னர் இராணுவத்தினர் அப்பகுதியிலிருந்த பொதுமக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (உ)

## குண்டு விழுந்து 15 அடி ஆழக் குழி

யாழ்ப்பாணம், நவ. 22

உரும்பராய் - பலாலி வீதியில் உள்ள வீடு ஒன்றின் அருகில் குண்டு விழுந்து வெடித்த இடத்தில் கிணறு போன்று ஆழமான குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சின்போது அடுத்தடுத்து இரண்டு குண்டுகள்விழுந்து வெடித்த இடத்திலேயே சுமார் 15 அடி ஆழமும், 10 அடி அகலமுங்கொண்ட பெரிய குழி ஏற்பட்டுள்ளது. (ஓ-5)

## ஹெலியை கண்டு ஓடி விழுந்த சிறுமி காயம்

யாழ்ப்பாணம், நவ. 22

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவாறு வந்த ஹெலியைக்கண்டு அஞ்சிஓடிய சிறுமி தடுக்கிவிழுந்தபோது கண்ணாடித் துண்டு வெட்டிக் காயமடைந்தார்.

குருநகரில் நடந்த இந்தச்சம்பவத்தில்ஜெனோட் கவிஸ்டா [வயது 9] என்ற சிறுமியே காயமடைந்தவர். (ஓ-15)

## நிவாரண வேலைகள்

## தொண்டர் நிறுவனங்கள் செயலகத்துடன் செயற்படும்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இனிமேல் செயலகத்துடன் இணைந்து நிவாரண வேலைகளை மேற்கொள்ள உள்ளன.

செவ்வாயன்று செயலகத்தில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:—

★ அரச சார்பற்ற நிறுவனங்கள், பெரும்பான்மையான அகதி முகாம்களில் உள்ளவர்களுக்குப் போதுமான அளவுஉணவுப்பொருள்களை வழங்கமுடியாத நிலையில் உள்ளன. அதனால் அரசு வழங்கும் பொருள்கள் தவிர்ந்த மற்றைய பொருள்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும்.

★ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கப்பல்மூலம் பொருள்களைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்தல்.

நிவாரண வேலைகளை இருபகுதியினரும் இணைந்து மேற்கொள்ளுதல். (ஓ-3-5)

## கொம்படி வெளிப் பாதையில் படகு தள்ளும் வியாபாரிகள்

கொம்படி வெளிப் பாதையில் தற்போது நீர் மட்டம் குறைந்துள்ளது.

சைக்கிள் வியாபாரிகள் தமது சைக்கிள்களையும் மற்றும் பொருள்களையும் படகில் ஏற்றி விட்டு படகைத் தள்ளிக் கொண்டு மறுகரையை அடைகின்றனராம்.

இதற்கும் படகு உரிமையாளர்களால் ஒரு தொகைக் கட்டணம் இவர்களிடமிருந்து அறவிடப்படுகிறது. (இ-117)

## இந்திய...

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்கள் விவரம் வருமாறு:

1. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இணை அமைச்சர் — மேனகா காந்தி
2. போக்குவரத்து அமைச்சர் — டாக்டர் சஞ்சய் சிங்
3. சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் — மோகன்பவன்.

**12 இணை அமைச்சர்கள்**

1. சுபுஹோன் சகாய், 2. பக்தசரண்தாஸ், 3. திருமதி உஷாசிங், 4. பாகிர் கோவர்த்தன், 5. பஸ்வராஜ் பட்டீல், 6. ராம் பகதூர்சிங், 7. சர்தார் ஹுசேன், 8 ராம் விலாஸ் சுமன், 9. ஜெயந்தி லால் ஷா, 10. தபான் ரோய், 11. காஸ் மொரார்கி. 12. லலித் விஜேசிங்.

**4 துணை அமைச்சர்கள்**

1. திக்விஜய்சிங், 2. சாந்திலால் பட்டீல், 3. திகாயத் சௌத்ரி, 4. ஜெயப்பிரகாஷ், (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைச்சரவை நேற்று விஸ்தரிப்பு

புதுடில்லி, நவ. 22

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பதவியேற்று பதினொரு நாட்களின் பின்னர் நேற்று மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட 32 அமைச்சர்களில் 13 பேர் அமைச்சரவை அந்தஸ்து பெற்றுள்ளார்கள்.

மூன்று பேர் தனிப்பொறுப்புக்களுடன் கூடிய இணை அமைச்சர்களாகவும்—

வேறு 12 பேர் இணை அமைச்சர்களாகவும்—

நான்கு பேர் துணை அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

வி.பி.சிங் அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்த 7 அமைச்சர்களும் சந்திரசேகர் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர்.

அவர்களில் இருவர் அமைச்சரவை அந்தஸ்து பெற்றனர்.

(அமைச்சர்கள் விவரம் உட்பக்கத்தில்)

## தாட்சருக்கு எதிரான விவாதம் இன்று நடக்கும்

லண்டன், நவ 22

பிரதமர் தாட்சர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்க பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் இன்று வியாழக்கிழமை அழைக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைமைப் பதவிக்கான தேர்தலில் பிரதமர் தாட்சர் தேவையான எம்.பிக்களின் ஆதரவைப் பெறத் தவறியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் நீல் கின்னொக் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்ற சபாநாயகரிடம் நேற்றுக் கையளித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-எ)

[முற்றிய செய்தி 2 ஆம் பக்கத்தில்]

## பதவியேற்பு நடந்த வேளையில்

## பத்திரிகையாளர் மீது தடியடி; விசாரணைக்கு உத்தரவு

புதுடில்லி, நவ. 22

விரிவுபடுத்தப்பட்ட இந்திய மத்திய அமைச்சரவை பதவி ஏற்பு நேற்று இடம்பெற்ற போது, பிந்திச் சென்ற பத்திரிகையாளர்கள் ஜனாதிபதி மாளிகையினுள் அனுமதிக்கப்படவில்லை.

அவர்கள் வெளியே நின்று கோஷங்கள் எழுப்பி ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர்கள் மீது ஜனாதிபதி மாளிகையின் காவலர்கள் தடியடி பிரயோகம் நடத்தினர்.

அப்போது ஏழு செய்தியாளர்கள் படுகாயமடைந்தனர். அவர்களிடமிருந்த 'கமரா'க்கள் பிடுங்கி வீசப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை ஒன்று நடத்தும்படி ஜனாதிபதி வெங்கட்ராமன் உள்துறை அமைச்சரைப் பணித்திருக்கிறார். (உ)

### ராணுவ முகாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமினி வித்தியாலய முகாமிலிருந்த படையினர் சிலர் மூற்பட்டதாகவும்—

அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து முகாம் நோக்கி பின்வாங்கியதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (உ)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை (உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம் கச்சேரி) 20-11-1990 அன்று காலமானார்.

இவர் கலாறஞ்சினியின் அன்புக் கணவரும், கௌசல்யா, கார்த்திகாயினி, நளாயினி, விஷ்ணு, கோபிகா ஆகியோரின் தந்தையும், அனலைதீவைச் சேர்ந்த காலம்சென்ற வேலுப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா மாஸ்டர், மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும், சுவாமிநாதர், நவரத்தினம், அருளானந்தம், சுப்பிரமணியம், ஐயம்பெருமாள் (இலங்கை வங்கி முகாமையாளர், அனுராதபுரம்), விமலாதேவி, பரமேஸ்வரி, சாரதா, குமணன் ஆகியோரின் சகோதரரும், பத்மநாதன், இரகுநாதன் (புலகயிரதத் திணைக்களம், கொழும்பு), சண்முகநாதன் (மேலதிக அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்), சபாநாதன், ஜெகநாதன், கமலநாதன், யோகநாதன், இரவீந்திரநாதன், சிதம்பரநாதன், வள்ளியம்மை, சபாரெத்தினம், விமலராணி, செல்லம்மா, தனலட்சுமி, பாலச்சந்திரன், குமாரசாமி, குணரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும், நல்லம்மா, கமலாம்பாள், சுபத்திராதேவி, லலி, அனுசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

இறுதிச் சடங்கு இன்று (22-11-1990) பிற்பகல் 2-00 மணிக்கு இல. 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
இல. 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
க. சண்முகநாதன் (மைத்துனர்)
(சி/5450)

## கண்டியில் ஜே. வி. பி.

ஜே. வி. பி. தீவிரவாதிகள் தென்மாகாணத்தில் மட்டுமன்றி மத்திய இலங்கையிலும் மீண்டும் தலையெடுத்துள்ளார்கள்.

கண்டி நகருக்கு அண்மையில் உள்ள கட்டுகாஸ்தோட்டைப் பகுதியில் ஜே.வி.பியினரின் முகாம் ஒன்றைக் கண்டுபிடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

அங்கு நடைபெற்ற சண்டையில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், மற்றும் பலர் தப்பி ஓடிவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

முகாமிலிருந்து பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ)

## நோர்வே உதவி

கொழும்பு, நவ. 22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவ நோர்வே 13 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. [உ-எ]

## பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 22

நேற்றுக் காலை 6 மணி முதல் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்பகுதியில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (ஒ-3)

## புங்குடுதீவில் மாவீரர் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். மாவட்ட கூட்டுறவாளர் நடத்தும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்ச்சித் தொடர் இன்று தீவகக் கோட்டத்தில் இடம்பெறும். புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். [ஒ-3]

### மாவீரர் நாள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானோர் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டையுடன் காணப்பட்டனர்.

மாவீரர்களின் பெயரில் வீதிகளைத் திறந்து வைக்கும் வைபவங்களும்; மாவீரர் தினக் கூட்டங்களும் பல இடங்களில் நடைபெற்றன. முக்கிய இடங்களில் புரட்சி கீதங்களும் இசைக்கப்பட்டன. மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

வீரமரணமடைந்த போராளிகளின் பெற்றோர் அந்த அந்தக் கிராமங்களில் இடம்பெற்ற கொடியேற்று வைபவங்களில் கலந்துகொண்டு, கொடிகளை ஏற்றி வைத்தனர்.

பல இடங்களில் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன.

யாழ் கோட்ட கூட்டுறவாளர்கள் நேற்று மானிப்பாயில் இருந்து சைக்கிள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். [ஒ-3-5-6]

### தச்சன் காட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிலும் ஐவர் வீரமரணமடைந்தனர்.

செழியன் (சிதம்பரப்பிள்ளை சண்முகராஜா) ஒட்டுமடம், நெல்சன் (வீரசிங்கம் இந்திரகுமார்) கிளிநொச்சி, கணேஷ் (நாகசோதி ஜீவநேசன்) புத்தூர், தம்பி (கந்தசாமி தம்பி) மயிலிட்டி, நவில் (நடராஜா சேதீஸ்வரன்) அச்செழு ஆகியோரே வீரமரணமடைந்த போராளிகள் ஆவர்.

இதேவேளை—

நேற்று முன்தினம் அங்கு [illegible] சாலை வீரமரணமடைந்தார். [ஒ-3-5]

## தீவுப் பகுதியிலும் மாவீரர் விழா

யாழ்ப்பாணம், நவ. 22

தீவுப்பகுதியிலும் மாவீரர் நாள் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகி உள்ளன.

மண்டைதீவில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்துடன், போரிட்டு வீரமரணமடைந்த 48 போராளிகளின் ஞாபகார்த்தமாக அங்கு அமைக்கப்பட்ட தூபியில் நேற்று புலிக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

## இறுதி வெற்றி காண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் உயர்ந்த அந்த மாவீரர்களை, நாங்கள் பெருமதிப்புடன் வணக்கம் செய்கின்ற நாள்.

எங்கள் மண்ணின் மூலை முடுக்குகள் எங்கும் எழுந்து நிற்கின்ற இந்த மாவீரர்களின் கல்லறைகளுக்கு முன் நின்று, இவர்களின் கனவுகளே எங்கள் நினைவுகளாய், அவர்களின் சுவடுகளே எங்கள் பாதைகளாய்க் கொண்டு பயணத்தைத் தொடர்வோம் என உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

எமது மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது 18 வயதையும் கடந்த வெற்றிகளைப் பெற்றபடி வளர்ந்து வருகிறது.

எமது மண்ணை மீட்க, தர்மத்தை நிலைநாட்ட, கௌரவத்துடன் வாழ, எவ்வளவு மக்கள் முன்வருகின்றார்கள், எவ்வளவு மக்கள் தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள் - அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதே போராட்ட வளர்ச்சியை சுட்டிக்காட்டும்.

### ஒரே குடும்பமாக

அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓரளவு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

எமது மக்கள் தமிழீழத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் நாம் எல்லோரும் உடன் பிறப்புக்கள், ஒரே குடும்பத்தவர்கள் என்ற உணர்வுடனேயே வாழவேண்டும்.

கஷ்டங்கள், துன்பங்கள் யாருக்கு வந்தாலும் எப்பகுதியில் நிகழ்ந்தாலும், நாம் ஒவ்வொருவரும் எமக்கு நேர்ந்ததாகக் கருதி ஒருவருக்கொருவர் உதவியாக, ஆறுதல் கூறியே வாழவேண்டும்.

இன்று எமது மக்கள் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு, ஸ்ரீலங்கா இனவெறி அரசினால் கொடுமைகளையும், இன அழிப்புக்களையும் அனுபவித்து வருகின்றனர்.

வடக்கே யாழ்ப்பாணம் முதற்கொண்டு தென்தமிழீழமான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைவரையிலும் இக் கொடுமைகளையும் துன்பங்களையும் எமது மக்கள் தாங்குகின்றார்கள்.

### மட்டக்களப்பு அம்பாறையில்

ஆனால் புவியியல் காரணிகளினாலும், அரசியல் காரணிகளினாலும் தென்தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த மக்கள் அனைவருமே அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர், அவர்களது சொந்த வசிப்பிடங்களிலிருந்து, விவசாய நிலங்களிலிருந்து, கடற்கரைகளிலிருந்து, காடுகளிலிருந்து வெளி இடங்களுக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

வழி நெடுகிலும் இவர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படுகிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் அகதிமுகாம் என்ற பெயரில் பணயமாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட்டார்கள்.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பல பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

கடந்த 5 மாதக் கொடுமைகளால் அங்கே குடும்பங்கள் சிதைந்துள்ளன. கணவனுக்கு மனைவியின் நிலையோ, பெற்றோருக்குப் பிள்ளைகளின் நிலையோ தெரியாது. அகதிகளாக விரட்டப்பட்ட தமிழர்கள் நாளாந்தம் நோயாலும், பட்டினியாலும் அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக விடுதலைக்கு அதிக விலை செலுத்திக் கொண்டிருக்கும் தென் தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறைப் பகுதி மக்கள் விடுதலைப் போராட்டத்தை அதிகளவில் நேசிக்கிறார்கள்.

இயலுமானவரை நாம் ஒவ்வொருவரும் இந்த மக்களின் துயரைப் பகிர்ந்து கொள்வதும், எந்த இலட்சிய தாகத்தை நெஞ்சில் இருத்தி களம் புகுந்து வீரமரணமடைந்தார்களோ, அந்த இலட்சியத்தை உறுதியுடனும், நம்பிக்கையுடனும் செயற்படுத்தி இறுதி வெற்றி காண நாம் அனைவரும் ஒரே குடையின் கீழ் அணி திரள்வதுதான் எமது மாவீரர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

### கண்முன்னே வரலாறு

வரலாற்றில் எத்தனையோ புரட்சி வீரர்களையும், சிந்தனையாளர்களையும் நாம் படித்திருக்கின்றோம், கேட்டிருக்கின்றோம், போற்றியிருக்கின்றோம்.

ஆனால், இன்று நாம் வாழும் காலத்திலேயே எமது கண்ணின் முன்னாலேயே உன்னத வரலாறு ஒன்று படைக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

எம்முடனேயே வாழ்ந்தவர்கள், எம்முடனேயே உண்டு, உறங்கியவர்கள், தங்களது இரத்தத்தால் எழுதும் உன்னத வரலாற்றைப் பார்க்கிறோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி கிறிஸ்ரேப்பர் மேரி யோசப்பின்

(சின்னத்தங்கச்சி)

திருமதி கிறிஸ்ரோப்பர் மேரி யோசப்பின் 21-11-90 இல் காலமானார்.

இவர் F. X. கிறிஸ்ரோப்பர் (சுங்க இலாகா ஊர்காவற்றுறை) இன் அன்பு மனைவியும், இமெல்டா ராணி, கிறிஸ்ரி யேசுராசா (மில்க் வைற் விகிதர்), ராசேஸ்வெலின் தேவராசா (ஊர்காவற்றுறை பிரதேச சபை), அன்ரனிராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் சேவியர், குணநாயகம் (ப. நோ. கூ. சங்கம் ஊர்காவற்றுறை), பேபி, மாலா (நீதிமன்றம் ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-11-90 இன்று 3 மணி அளவில் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
க. யேசுராசா
(14661)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-11-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org